මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: NP/RD/DCB 2026
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2026.01.16

நிதி அமைச்சின் சுற்றுநிருபம்: MF/02/2026

அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும்,

## பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2026

"வளமான நாடு - அழகான வாழ்க்கை" கொள்கைப் பிரகடனமானது, நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்குவதை ஒரு முக்கியமான மற்றும் முன்னுரிமைப் பணியாக அடையாளம் கண்டுள்ளது. நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை அடைவதற்காக, இந்த உற்பத்திப் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப, மூலோபாய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை திறம்படவும், வெளிப்படையாகவும், பொறுப்புணர்வுடனும் செயற்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

அதன்படி, தன்னிறைவு பெற்ற பொருளாதாரத்தை உருவாக்குதல், ஏற்றுமதிகளை பல்வகைப்படுத்துதல், இறக்குமதியை மாற்றும் தொழில்களை ஊக்குவித்தல், கிராமிய மக்களை உற்பத்திப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட அதிகாரம் அளித்தல், சுற்றுலாத் துறையை மேம்படுத்துதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் பொருளாதாரத்தின் மீள்தன்மையை அதிகரித்தல் போன்ற அரசாங்கத்தின் முன்னுரிமை வளர்ச்சி இலக்குகளை அடைய பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் – 2026 செயற்படுத்தப்படும்.

மேற்படி அபிவிருத்தி இலக்குகளை மையமாகக் கொண்டு, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் – 2026 இன் கீழ் ஒவ்வொரு பாளுமன்ற உறுப்பினருக்கும் ரூ. 10 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நோக்கத்திற்காக தேவையான நிதி ஏற்பாடுகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு தொடர்புடைய செலவினத் தலைப்பின் கீழ் வழங்கப்படும். அதன்படி, இந்த சுற்றறிக்கையின் பந்தி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தித் துறைகளின் கீழ் அடையாளம் காணப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட வருமானம், வேறு எந்த நிதி ஆதாரத்தாலும் உள்ளடக்கப்படாதவை, உகந்த முறையில் முதலீடு செய்யப்படுவதை உறுதி செய்வது உங்கள் பொறுப்பாகும்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கருத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்துவதை எளிதாக்குவதற்கு பின்வரும் வழிகாட்டுதல்கள் வெளியிடப்படுகின்றன.

**1. கருத்திட்டங்களை அடையாளம் காண்பதற்கான அபிவிருத்திப் பிரிவு**

1.1 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தனைச் செயற்படுத்துவதற்கான அபிவிருத்தித் தேவைகளை அடையாளம் காண்பதில், பின்வரும் அபிவிருத்திப் பிரிவுகளுக்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

இலக்கம் – அபிவிருத்திப் பிரிவு

1. விவசாயம், கால்நடை மற்றும் மீன்பிடித் துறைகளில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள்.
   உற்பத்தி பல்வகைப்படுத்தல் கருத்திட்டங்கள், பெறுமதி சேர்த்தல் கருத்திட்டங்கள், கமத்தொழில் அபிவிருத்தி, டிரக்டர் தொடர்பான தயாரிப்பு, மக்களின் வாழ்க்கை மற்றும் விவசாய காணிகளுக்கு வன விலங்குகளால் ஏற்படும் அச்சுறுத்தலைக் குறைப்பதற்கான திட்டங்கள், பதிவுசெய்யப்பட்ட மற்றும் செயலிலுள்ள விவசாயிகள் அமைப்புகளுக்கு கூட்டாகப் பயன்படுத்தக்கூடிய விவசாய மூலதன உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை வழங்குதல், கால்நடை அபிவிருத்தி, கூட்டுப் பண்ணை அபிவிருத்தி, நிரல் அமைச்சு மட்டத்தில் உள்ளடக்கப்படாத மீன்வளத் துறைமுகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், உள்நாட்டு மீன்வளத் துறையின் வளர்ச்சிக்கான திட்டங்கள், மீன்பிடித் துறைமுகங்களின் அபிவிருத்தி.

2. சிறு நீர்ப்பாசனம் உட்பட உற்பத்தி பொருளாதாரத்தை ஆதரிக்கும் நீர் மூலங்களை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டங்கள்.
   சிறிய குளங்களின் கொள்ளளவை அதிகரித்தல், மதகுகள், கரைகள், பிற நீரேந்துப் பிரதேசங்கள், நீர் மற்றும் குளங்கள், விவசாய கிணறுகள், குழாய் கிணறுகள் ஆகியவற்றை நிர்மாணித்தல் மற்றும் புதுப்பித்தல்.

3. தொழில்முயற்சியான்மை அபிவிருத்திக்கான கருத்திட்டங்கள், இறக்குமதி மாற்றுத் தொழில்கள் மற்றும் உள்ளூர் மூலப் பொருட்களைப் பயன்படுத்தும் தொழில்களை ஊக்குவித்தல்.
   தொழில்முனைவோருக்கு தொழில்நுட்ப அறிவை வழங்குதல். உற்பத்தி கிராமங்களுக்கான அபிவிருத்திக் கருத்திட்டங்கள், உள்ளூர் திரவ பால் பொருட்களை ஊக்குவிக்கும் கருத்திட்டங்கள், சந்தைகள், வாராந்த சந்தைகள், விற்பனை மையங்கள், களஞ்சிய வசதிகள், குளிர்பதன பௌதீக வசதிகள் அல்லது அவற்றின் சுகாதார வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டங்கள்.

4. உற்பத்தி பொருளாதாரத்திற்கு அடிப்படையாக இருக்கும் பிற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல். வேலைவாய்ப்பு உருவாக்கும் கருத்திட்டங்கள், வாழ்வாதார அபிவிருத்திக்கான பொது கருத்திட்டங்கள் மற்றும் பொருட்களின் போக்குவரத்துக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

5. சுற்றுலாத் தலங்கள் அபிவிருத்தி மற்றும் சுற்றுலா வணிக அபிவிருத்திக் கருத்திட்டங்கள்.

உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்கள், சுற்றுலாவை இலக்காகக் கொண்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான உள்ளூர் ஆயுர்வேத மருத்துவ மையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், சுற்றுலா தலங்களில் பொது சுகாதார வசதிகள் மற்றும் ஓய்வு இல்லங்களை நிர்மாணித்தல்.

6. கிராமிய சமூக குடிநீர் விநியோகக் கருத்திட்டங்கள்.
   நீர் மூலங்கள் தெளிவாக அடையாளம் காணப்பட்டு, எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு சுமையாக மாறாத வகையில் பராமரிப்புக்காக ஒரு குறிப்பிட்ட திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

7. உற்பத்தி பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள்.
   கிராமிய பாதைகள், விவசாயப் பாதைகள், நடைபாதைகள், மதகுகள், சிறுபாலங்கள், இரும்பு பாலங்கள், சப்பாத்துப் பாலங்கள், பெட்டி மதகுகள் மற்றும் வீதியோர வடிகால் அமைப்புகளின் நிர்மானம் அல்லது நவீனமயமாக்கல்.

8. உற்பத்தி பொருளாதார நடவடிக்கைகளுக்காக கிராமிய அல்லது பிராந்திய மட்டத்தில் செயற்படுத்தக்கூடிய மின்சாரக் கருத்திட்டங்கள்.
   சிறிய அளவிலான மின்சாரத்தை விரிவுபடுத்துதல், மின்சார திறனை அதிகரித்தல், உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பொதுவாகப் பயன்படுத்தப்படும் மையங்களுக்கு மின்சார இணைப்புகளை வழங்குதல்.

9. அரசாங்கம் பல்வேறு கருத்திட்டங்களின் கீழ் பணத்தை முதலீடு செய்து பணிகளைத் தொடங்கினாலும், பல்வேறு காரணங்களால் கைவிடப்பட்ட அல்லது பகுதியளவு முடிக்கப்பட்ட சிறிய அளவிலான கட்டிடங்கள் அல்லது மூடப்பட்ட அரச கட்டிடங்களைப் புதுப்பித்தல்,

   மின்சாரம், நீர், சுகாதார வசதிகள் மற்றும் அணுகல் பாதைகள் உருவாக்கப்பட்டு, அவற்றை பொருளாதார நடவடிக்கைகளுக்கு முறையாகப் பயன்படுத்த முடிந்தால், அந்த பொருளாதார நடவடிக்கைகளுக்கான ஒரு குறிப்பிட்ட கருத்திட்டம் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டிருந்தால், அந்தக் கட்டிடங்கள் புதுப்பிக்கப்பட்டு வசதிகள் உருவாக்கப்படல் வேண்டும். முன்மொழியப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் இந்தக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்ட உடனேயே தொடங்கப்பட வேண்டும், மேலும் இந்த நோக்கத்திற்காக பொது அல்லது பொது-தனியார் கூட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

10. இயற்கை பேரழிவுகள் மற்றும் அனர்த்த தணிப்புத் திட்டங்களால் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மீட்டெடுத்தல். பிற நிதி ஆதாரங்களால் உள்ளடக்கப்படாத, கிராமிய அல்லது உள்ளூர் சமூகங்களின் உற்பத்திப் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் உற்பத்தித் திட்டங்களை மீள்கட்டமைத்தல்.

1.2 கருத்திட்டங்களை அடையாளம் கண்டு முன்னுரிமையளித்தல்

மேலே 1.1 இன் கீழ் குறித்த 1 முதல் 10 வரையிலான அபிவிருத்தித் துறைகளின் கீழ் கருத்திட்டங்களை அடையாளம் காணும்போது, மக்கள் பிரதிநிதிகளால் அடையாளம் காணப்பட்ட கருத்திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும் என்பதுடன், பின்வரும் மூலங்களைப் பயன்படுத்தி அந்தக் கருத்திட்டங்களை

அடையாளம் காண்பது நிர்வாக தாமதங்களைக் குறைக்க உதவும் என்பதை மக்கள் பிரதிநிதிகளுக்குத் தெரிவிக்க வேண்டும்.

1.2.1 ஏற்கனவே தயாரிக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திக் கருத்திட்டம்

1.2.2 பல்வேறு நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி முன்னுரிமை பற்றிய ஆவணங்கள் (ஏதேனும் இருப்பின்)

1.2.3 பொது மற்றும் கூட்டுப் பணிகளுக்கு மட்டுமே முன்னுரிமை அளித்தல் மற்றும் தனிப்பட்ட நடவடிக்கைகளுக்கு நேரடி மானியங்களைத் தவிர்த்தல்.

## 2. கருத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்தல், அங்கீகாரமளித்தல் மற்றும் நிதி விடுவிப்பு

2.1 பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களைக் கூட்டி, இந்தத் தேசிய வேலைத்திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களைக் கூட்டும்போது, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் 2025.09.01 அன்று வெளியிடப்பட்ட "மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் மறுசீரமைப்பு" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட 03/2025 ஆம் இலக்க உள்நாட்டலுவல்கள் சுற்றறிக்கைக்கு கவனம் செலுத்த வேண்டும்.

2.2 குறித்த மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஒதுக்கீட்டிற்குள் கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கான முன்மொழிவுகளை தங்கள் மாவட்டத்தின் தொடர்புடைய பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும். வன்னி தேர்தல் மாவட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு நிர்வாக மாவட்டங்களுக்கும் முன்மொழிவுகளை சமர்ப்பிக்கலாம். அதே நேரத்தில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களுக்கும் முன்மொழிவுகளை சமர்ப்பிக்கலாம்.

2.3 தேசியப் பட்டியலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஒதுக்கீட்டு வரையறைகளுக்குள் எந்தவொரு மாவட்டத்திற்கும் கருத்திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கலாம், என்பதுடன் தொடர்புடைய முன்மொழிவுகள் அந்தந்த மாவட்டங்களின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2.4 கருத்திட்டமொன்றின் குறைந்தபட்ச மதிப்பு ரூ. 05 இலட்சமாகும்.

2.5 கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்படும் அபிவிருத்தி முன்மொழிவுகளை, சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்தின் உதவி / பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) ஆகியோரின் பரிந்துரைகளுடன் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் பரிந்துரைக்காக அனுப்புவது பிரதேச செயலாளரின் பொறுப்பாகும். இங்கு, கருத்திட்டங்களை பரிந்துரைக்கும் போது, பிரதேச செயலகத்தின் உதவி / பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோர் கருத்திட்டங்கள் மேலே உள்ள பந்தி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களுக்கு இணங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

2.6 பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் பரிந்துரையை வழங்கும் போது, மேலே இல. 1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தித் துறைகளின் கீழ் பிரதேச செயலகப் பிரிவில் இயற்கை வளங்கள், மூலப்பொருட்கள், கிடைக்கும் நிலத்தின் அளவு, பொருளாதார நடவடிக்கைகள், சுற்றுச்சூழல் நிலைமைகள், மக்களின் பொருளாதார நடவடிக்கைகள், அந்தப் பகுதிக்கு தனித்துவமான அபிவிருத்தித் தேவைகள், அத்துடன் ஏழைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பொருளாதார செயல்முறைக்கு பங்களிக்கும் திறன் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, மக்களுக்கு உடனடியாக பயனளிக்கும் அபிவிருத்தித் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

2.7 பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட முன்மொழிவுகளை, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அங்கீகாரத்துக்காக, பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்களுக்கு தாமதமின்றி அனுப்புதல் வேண்டும்.

2.8 மாவட்டச் செயலாளர்கள் குறித்த முன்மொழிவுகளை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரின் பரிந்துரையுடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அங்கீகாரத்துக்காக அனுப்புதல் வேண்டும். இங்கு, கருத்திட்டங்களை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிடம் சமர்ப்பிக்கும் போது, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரும் மாவட்டச் செயலாளரும் குறித்த கருத்திட்டங்கள் மேலே உள்ள பந்தி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களுக்கு இணங்குவதை உறுதி செய்தல் வேண்டும்.

2.9 மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினால், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் பரிந்துரைகளுடன் சமர்ப்பிக்கப்படும் கருத்திட்டங்களை அங்கீகரிக்கும் போது, கருத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தயார்நிலை, அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டு வரையறைக்குள் கருத்திட்டத்தை நிறைவுசெய்யும் திறன், கால அவகாசம், நிறுவன திறன், தொழில்நுட்ப விடயங்கள் மற்றும் வானிலை மற்றும் காலநிலை காரணிகள் ஆகியவற்றில் மிகுந்த கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

2.10 அதேபோன்று, குறித்த முதலீட்டின் மூலம், உள்ளூர் வளப் பயன்பாடு, பெறுமதி சேர்ப்பு, சந்தை, விநியோக வலையமைப்பு, மதிப்புச் சங்கிலி அபிவிருத்தி, நிலைபேறானதன்மை, பொதுப் பயன்பாட்டு ஆற்றல், பராமரிப்பு முறைமை, மூலப்பொருட்களின் கிடைக்கும் தன்மைக்கேற்ற வழங்கல், வழங்களுக்கான கேள்வி, சுற்றுச்சூழல் காரணிகள், வருமான விநியோகம் மற்றும் தொழில் உருவாக்கல் கருத்திட்டமாயின், உருவாக்கப்படும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகள் போன்ற காரணிகளுக்கு கவனம் செலுத்த வேண்டும்.

2.11 மேலும், கட்டுமானம் மற்றும் புதுப்பித்தலுக்கான நிதியை ஒதுக்குவதற்கு முன், நிலம் பொதுவான பயன்பாட்டில் தெளிவாக உள்ளதா என்பதையும், முன்மொழியப்பட்ட நன்மைகள் எதிர்காலத்தில் தடையின்றி நிலைநிறுத்தப்பட முடியும் என்பதையும், பராமரிப்பு நடவடிக்கைகள் அரசாங்கத்திற்கு மேலும் சுமையாக மாறாமல் இருக்க ஒரு சரியான வழிமுறை உருவாக்கப்பட்டுள்ளதா என்பதையும் திருப்திப்படுத்த வேண்டும்.

2.12 இந்தக் கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள், பிற நிரல் அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பல்வேறு திணைக்களங்களால்

மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்கள் மற்றும் ஏனைய கருதிட்டங்களுடன் இரட்டிப்பாகாதிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

2.13 மேற்கூறிய விடயங்களைக் கருத்திற் கொண்டு, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தால் சமர்ப்பிக்கப்படும் அபிவிருத்தி முன்மொழிவுகளிலிருந்து, ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டு வரையறையை மீறாமல், 2026 ஆம் ஆண்டுக்குள் செயற்படுத்தப்பட்டு முடிக்கக்கூடிய உயர் முன்னுரிமை மற்றும் ஆற்றல் கொண்ட திட்டங்களை அங்கீகரிக்க வேண்டும்.

2.14 மாவட்டச் செயலாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழிவுகள், மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளாயின், பின்னிணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திலும், தேசியப் பட்டியலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டால், பின்னிணைப்பு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திலும், நிதி ஒதுக்கீடுகளைப் பெறுவதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு தாமதமின்றி சமர்ப்பித்தல் வேண்டும்.

2.15 நிதி ஒதுக்கீடுகள் கிடைத்தவுடன், தாமதமின்றி கருத்திட்டங்களைத் தொடங்குவது மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேசச் செயலாளர்களின் பொறுப்பாகும்.

**3. கருத்திட்டங்களைச் செயற்படுத்தல்**

3.1 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் – 2026 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள் 2026 டிசம்பர் 15 அன்று அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

3.2 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கருத்திட்ட முன்மொழிவு ஏதேனும் காரணத்திற்காக திருத்தப்பட வேண்டியிருந்தால், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் பரிந்துரையின் பேரிலும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் ஒப்புதலுடனும் திருத்தம் செய்யப்படல் வேண்டும். இருப்பினும், விதிகளை சரிசெய்வதற்காக, தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு முன்மொழிவை சமர்ப்பித்தல் வேண்டும். திருத்தப்பட்ட கருத்திட்டங்கள் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்படுமா என்பது குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

3.3 அனைத்து கருத்திட்டங்களும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விதிகள், சுற்றறிக்கைகள், பெறுகை வழிகாட்டுதல்கள் மற்றும் நிதி பிரமானங்களின்படி செயற்படுத்தப்படுவதை கண்டிப்பாக உறுதி செய்தல் வேண்டும்.

3.4 2024.11.25 ஆந் திகதிய 2412/01 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட பொருட்கள், பணிகள் மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகளுக்கான பெறுகை வழிகாட்டுதல்கள் 2024 இன் படி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

3.5 கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்ட கருத்திட்டங்கள் மற்றும் கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்காக மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரின் கீழ் முறையானதொரு வேலைத்திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். இதற்காக மாவட்ட திட்டமிடல் மற்றும் பிரதேச செயலகங்களின் திட்டமிடல் பிரிவில் இணைக்கப்பட்டுள்ள பிரதி / உதவி பணிப்பாளர்களை (திட்டமிடல்) சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.6 பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் கருத்திட்டங்களைச் செயற்படுத்தும்போது, அதற்கான ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவைத் தயாரித்து, பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்ட பிரதி / உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ், பிரதேசத்தின் கிராம அலுவலர் பிரிவுகளுக்குப் பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி அலுவலர்களுக்குப் பொருத்தமான பொறுப்புகள் ஒதுக்கப்படல் வேண்டும்.

## 4. பிரதேச, மாவட்ட, தேசிய மட்டங்களில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சித்திட்டத்தினைக் கண்காணிப்பதற்கான வழிமுறைகள்

4.1 பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் 2026 ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்ட முன்னேற்றம் பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் நிகழ்ச்சி நிரல்களில் சேர்க்கப்பட்டு, பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களால் மதிப்பாய்வு செய்யப்படல் வேண்டும்.

4.2 மேலும், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரின் கீழ், வாராந்த அடிப்படையில், பிரதேச மட்டத்தில் முன்னேற்றத்தை, அதாவது தயாரிக்கப்பட்ட குறிப்பிட்ட காலக்கெடுவின்படி கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதை மதிப்பாய்வு செய்ய ஒரு முறையான வழிமுறை உருவாக்கப்படல் வேண்டும். அப்படியானால், மாவட்டச் செயலாளர் தேவைக்கேற்ப முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டங்களை நடத்த ஏற்பாடு செய்தல் வேண்டும்.

4.3 இந்த முழுக் கருத்திட்டமும் சனாதிபதி செயலகத்தால் கண்காணிக்கப்படுகிறது. அதன்படி, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் உங்களிடமிருந்து முன்னேற்றம் மற்றும் தேவையான தகவல்களைப் பெற்று அவ்வப்போது சனாதிபதி செயலகத்திற்கு வழங்கும். கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எதிர்காலத்தில் இது தொடர்பான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களை வெளியிடுவார். அதன்படி, இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து தெரிவிக்கப்படல் வேண்டும்.

4.4 இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களைக் கண்காணிக்க பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் பொருத்தமான டிஜிட்டல் செயலியை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்தப்படுகிறது.

## 5. ஏனைய விடயங்கள்

5.1 நிர்மாணக் கருத்திட்டங்களுக்கு ஒவ்வொரு கருத்திட்டத்தின் மதிப்பில் 2% ஐ விட அதிகமாகவும், நிர்மாணமல்லாத கருத்திட்டங்களுக்கு 0.5% ஐ விட அதிகமாகவும் இல்லாத ஒரு ஒதுக்கீடு நிர்வாகச் செலவுகளாக ஒதுக்கப்படுவதுடன் அது பின்வருமாறு பயன்படுத்தப்படல் வேண்டும்: (அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான மதிப்பீடுகளில் தொடர்புடைய நிர்வாகச் செலவுகளும் சேர்க்கப்பட வேண்டும். இருப்பினும், கருத்திட்டத்தின் உண்மையான நிறைவு மற்றும் அதற்கான கட்டணம் செலுத்தப்பட்ட பிறகு நிர்வாகச் செலவுகள் செய்யப்பட வேண்டும்).

(அ) மாவட்டச் செயலகம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு அதிகபட்சம் 25% க்கு உட்பட்டது.

(ஆ) கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படும் பிரதேச செயலகங்கள் மற்றும் செயல்படுத்தும் நிறுவனங்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு அதிகபட்சம் 75% க்கு உட்பட்டது.

5.2 இந்த கருத்திட்டத்தைச் செயற்படுத்த, மாகாண சபைகள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மாவட்டத்தில் அமைந்துள்ள அனைத்து அரச மற்றும் சட்டரீதியான நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப அதிகாரிகள் மற்றும் தொழில்நுட்ப ஆதரவு அதிகாரிகளின் சேவைகளை முடிந்தவரை பயன்படுத்த வேண்டும்.

5.3 இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2026 ஆம் ஆண்டுக்குள் செயற்படுத்தப்பட்டு முடிக்கக்கூடிய கருத்திட்டங்களை மட்டுமே அடையாளம் காண வேண்டும். முழுமையடையாத கருத்திட்டங்கள் அல்லது கட்டங்களாக செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களைத் தேர்ந்தெடுக்கக்கூடாது. ஒவ்வொரு கருத்திட்டமும் திட்டம் முடிவடைந்த உடனேயே மக்களுக்கு பயனளிக்கும் வகையில் செயற்படுத்தப்படல் வேண்டும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள் 2026 ஆம் ஆண்டுக்கு அப்பால் எந்த வகையிலும் தாமதப்படுத்தப்படக்கூடாது.

5.4 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2026 இன் கீழ் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களுக்கு செலுத்த வேண்டிய அனைத்து வகையான வரிகள் மற்றும் பிற கொடுப்பனவுகள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் மூலம் நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதுடன், இதற்கு மேலதிக நிதி ஏற்பாடுகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

5.5 கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி, குறித்த கருத்திட்ட நடவடிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டும். கருத்திட்ட செலவு மதிப்பீடுகளில் பெயர்ப்பலகை தயாரிப்பு போன்ற செலவுகள் உள்ளடக்கப்படக்கூடாது.

5.6 இந்த நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவதில் நீங்களும் உங்கள் கீழுள்ள அனைத்து அதிகாரிகளும் பாரபட்சமற்ற, நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுவீர்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5.7 இந்த சுற்றறிக்கை தொடர்பாக ஏதேனும் விளக்கம் தேவைப்படின், தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திரு. பிரியஞ்சித் அபேசேகர (011-2484783 / 0718610488) அவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

இந்த சுற்றறிக்கையின் உள்ளடக்கம் குறித்து, பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள் உட்பட, உங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உடனடியாகத் தெரிவிக்குமாறு நான் தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன்.

ஒப்பம்/-
கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும
திறைசேரியின் செயலாளர்

பிரதிகள்-

1. அனைத்து கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் - இந்த சுற்றறிக்கையின்படி அடையாளம் காணப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளை தொடர்புடைய பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு உடனடியாக அனுப்புதல்.
2. கௌரவ மாகாண ஆளுநர்கள் - தகவலுக்காக
3. அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களும் - தகவலுக்காக
4. சனாதிபதியின் செயலாளர் - தகவலுக்காக
5. பிரதமரின் செயலாளர் - தகவலுக்காக
6. செயலாளர், பொது நிர்வாகம், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு - தகவலுக்காக
7. அனைத்து மாகாண பிரதம செயலாளர்களும் - தகவலுக்காக
8. கணக்காய்வாளர் நாயகம் – கணக்காய்வாளர் நாயக திணைக்களம் - தகவலுக்காக
9. செயலாளர், நிதி ஆணைக்குழு - தகவலுக்காக
10. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம் - தகவலுக்காக, தேவையான நடவடிக்கைக்காக
11. பணிப்பாளர் நாயகம், தே. வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் - தகவலுக்காக, தேவையான நடவடிக்கைக்காக
12. பணிப்பாளர் நாயகம், கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் - தகவலுக்காக, தேவையான நடவடிக்கைக்காக
13. பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் - தகவலுக்காக, தேவையான நடவடிக்கைக்காக
14. அனைத்து மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்கள் - தகவலுக்காக, தேவையான நடவடிக்கைக்காக
15. அனைத்து பிதேச செயலாளர்கள் - தகவலுக்காக, தேவையான நடவடிக்கைக்காக

Allocation Request for Hon. Member of the Parliament

Annexture 1

Decentralized Capital Budget - 2026
Allocation Request for Approved Projects
District-
Name of the Hon. Member of the Parliament -

| No | Divisional Secretariat | Name of the Project | Duration of the Project | Sector of the Project | Number of Beneficiaries | Amount of the Project (Rs) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| Total Cost (Rs.) | | | | | | |

Director (Planning)
Signature and Official Stamp

District Secretary
Signature and Official Stamp

Annexure 2

## Allocation Request for Hon. Member of the Parliament (National List)

Decentralized Capital Budget - 2026
Allocation Request for Approved Projects
District-
Name of the Hon. Member of the Parliament -

| No | Divisional Secretariat | Name of the Project | Duration of the Project | Sector of the Project | Number of Beneficiaries | Amount of the Project (Rs) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| Total Cost (Rs.) | | | | | | |

Director (Planning)
Signature and Official Stamp

District Secretary
Signature and Official Stamp